NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 6 December 2022

# பல்கலைக்கழகப் பட்டதாரி மாத சராசரி சம்பளம் $4,200

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு படித்துள்ள, முதுநிலைப் பட்டம் பெற்றுள்ள, 20களிலும் 30களிலும் வயதுள்ள சிங்கப்பூரர்கள் சராசரியாக மாதம் $4,200 சம்பாதிக்கிறார்கள்.

அதே வேளையில், உயர்நிலை, அதைவிட குறைந்த கல்வித் தகுதி உள்ளவர்கள், தொழில்நுட்பக் கல்விக் கழகத் தகுதி உள்ளவர்களின் மாத சராசரி வருவாய், பட்டதாரிகளின் வருவாயில் பாதியாக அதாவது $2,000 ஆக இருக்கிறது. பரந்த ஒரு புதிய ஆய்வு மூலம் இந்த நிலவரங்கள் தெரியவருகின்றன.

பட்டயச் சான்றிதழ் கொண்டுள்ள, அல்லது ஏ-நிலை தகுதியுடன் கூடியவர்களின் மாத சராசரி சம்பளம் $2,600 ஆக உள்ளது. பட்டதாரிகளின் சம்பளம், இவர்களின் சம்பளத்தைவிட 62% அதிகமாக இருக்கிறது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சமூகப் பணித் துறையைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் இரினி இங், ஆய்வின் மிக முக்கிய ஆய்வாளராக இருந்தார். ஆய்வை 18 பேர் நடத்தினர். பட்டதாரிகளின் சம்பளம் கணிசமாக இருப்பதாக இணைப் பேராசிரியர் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.